வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்
வழக்குஎண். CC 77/2020
வழக்குசாட்சி LW13/ PW10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார், உதவி ஆய்வாளர், மணலி காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ராமசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 38 |

தேதி 03.02.2026
எதிரி 2 ஆஜர். எதிரி 1 இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.6 மணலி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 18.04.2018 அன்று இரவு 9.50 மணிக்கு அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான நான் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சூரியநாராயணன் த/பெ. பாளையம் விசாரணைச் செய்து புகார் வாக்குமூலம் பெற்ற நிலையம் வந்து மாதவரம் பால்பண்ணை காவல் நிலைய குற்ற எண். 140/2018 இதச பிரிவு 294(b), 324, 506(1) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் சூரியநாராயணன், சத்தியநாராயணன், சத்திவானி, ராஜா, முனியம்மாள், ஆஷா ஆகியோரை விசாரித்து தனிதனி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே சாட்சிகளான திவாகர், கோவிந்தராஜ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்

தயாரித்துள்ளார். அவை முறையே அ.த.சா.ஆ.4 மற்றும். அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் செந்தில்குமார் என்பவரை 19.04.2018 அன்று 14.30 மணிக்கு மாத்தூர் கேட் அருகே எதிரியை கைது செய்து சாட்சிகள் சீனிவாசன், கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் அவர் தன்னிச்சையா முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய செங்கல்லை அடையாளம் காட்டுவதாக கூறியதான் பேரில் சம்பவ இடம் சென்று மகஜரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எதிரியை விசாரணைக்கு பின்னிட்ட்டு நீதிமன்ற பிணைக்கு அனுப்பி வைத்தேன். எதிரிகள் சிவகுமார், கிளிம்டன் இருவரும் முன்பிணையம் பெற்று இந்நாள் வரை இருந்து வருகின்றனர். பின்னர் எதிரி மணிகண்டனை 15.05.2018 அன்று காலை 10.30 மணியளவில் சின்ன மாத்தூர் டாஸ்மார்க் கடை அருகே இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து கைது செய்து நிலையம் அழைத்து வந்து உரிய வழிக் காவலுடன் நீதிமன்ற பிணைக்கு அழைத்து வைத்தேன்.

இவ்வழக்கில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்த அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவர் முத்துநாராயணன், விக்னேஷ் என்பவரை விசாரித்து அவரிடம் இருந்து விபத்து பதிவேடு, காயசான்று பெற்றேன். காயச்சான்றானது அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சான்றுப்பொருளான உடைந்த செங்கல் ஆனது நீதிமன்றத்தில் படிவம் 95ன் மூலமாக Pl.No. 221/2018 ஆக ஒப்படைவுச் செய்யப்பட்டது. மேற்படி படிவம் 95 ஆனது அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. எதிரிகள் மீது விசாரணை முடித்து இதச பிரிவு 294(b), 324, 506(1)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை ஆனது வேரு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**